# <u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை</u>

## <u>மேட்டூர் நகராட்சி</u>

நிகழும் குரோதி வருடம் தை மாதம் 18ம் தேதி ஆங்கில ஆண்டு **31.01.2025ம்** தேதி **வெள்ளிகிழமை** காலை **11.00** மணிக்கு மேட்டூர் நகர்மன்றத்தில் சாதாரண கூட்டம் நடைபெற உள்ளதால் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நாள் :24.01.2025 நகர்மன்ற தலைவர்
இடம் :மேட்டூர் அணை மேட்டூர் நகராட்சி

**மன்ற பொருள்**

1. சேலம் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சேலம் அவர்களின் கடித எண்.001/மாசூபொ/தநாமாகவா/சேலம்/2024 நாள்.27.09.2024–ல் மேட்டூர் நகராட்சிக்கு சொந்தமான கோம்பூரன் காடு சர்கார் தோட்டம் பகுதியில் அமைந்துள்ள MCC குப்பை சேகரிக்கும் இடங்களில் ஆழ்துளை கிணற்று நீர் பகுப்பாய்வு செய்யப்பட்டதற்கான 2021–2022ஆம் ஆண்டு செலுத்த வேண்டிய நிலுவை கட்டண தொகை ரூ.14840/–ஐ செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

   மேற்படி நகராட்சி குப்பை சேகரிக்கும் பகுதிகளில் அமைந்துள்ள ஆழ்துளை கிணற்று நீர் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டதற்கன பகுப்பாய்வு கட்டண தொகை ரூ.14840/–ஐ சேலம் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சேலம் அவர்களுக்கு நகராட்சி பொதுநிதியிலிருந்து பகுப்பாய்வு கட்டணம் செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

அனுமதிக்கலாம்

(ந.க.எண்.3532/2024/இ1)

**அனுமதிக்கப்பட்டது.**
**தீர்மான எண்.1 நாள்.31.01.2025**

2. மேட்டூர் நகராட்சி சீதாமலை பழைய நீரேற்று நிலையத்தின் குடிநீர் பராமரிப்பு மற்றும் விநியோகம் தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ளுதல் மதிப்பீட்டு தொகை ரூ.14.90/– இலட்சத்தில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு 19.12.2024–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டுள்ளவாறு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் மற்றும் முகவரி | விலை விகிதம் |
|---|---|---|
| 1. | M/s.Govindan & Co poosaripatty (P.o) Omular. | (–) 0.15% மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. | M/s.Muthukumar Engineering ,Omular. | (+)1.66% மதிப்பீட்டை விட அதிகம். |

**<u>அலுவலக குறிப்பு</u>**

அனுமதிக்கலாம்

(ந.க.எண்.4107/2024/இ1)

**அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மான எண். 2 நாள்.31.01.2025**

3. மேட்டூர் நகராட்சி சொந்தமான காவேரி பாலம் புதிய நீரேற்று நிலையத்தின் குடிநீர் பராமரிப்பு மற்றும் விநியோகம் தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ளுதல் பணிக்கான மதிப்பீட்டு தொகை ரூ.14.60/– இலட்சத்தில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு 19.12.2024–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டுள்ளவாறு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் மற்றும் முகவரி | விலை விகிதம் |
|---|---|---|
| 1. | M/s.Govindan & Co poosaripatty (P.o) Omular. | (–) 0.15% மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. | M/s.Muthukumar Engineering ,Omular. | (+)1.68% மதிப்பீட்டை விட அதிகம். |

**<u>அலுவலக குறிப்பு</u>**

அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.4108/2024/இ1)**

**அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மான எண்.3 நாள்.31.01.2025**

4. மேட்டூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.12–ல் இயங்கி வந்த தந்தை பெரியார் பேருந்து நிலையத்தினை I&A திட்டத்தின் கீழ் புதிய பேருந்து நிலையம் கட்டமைக்கும் பணி மதிப்பீடு தொகை ரூ.640.00/– இலட்சத்தில் பணி மேற்கொள்ளப்பட்டது. மேற்படி இடத்தில் இருந்த பேருந்து நிலையத்தின்

கட்டிடங்கள் இடித்து அகற்றப்பட்டதன் மூலம் சேகரிப்பட்டுள்ள கீழ்கண்டுள்ள பழைய இரும்பு பொருட்களின் விவரம்.

1. Rolling Shutter (1.95x2.40) அளவு –60 எண்ணிக்கை
2. Roof slab, Colum,Beam ஆகியவற்றின் இரும்பு கம்பி (265m3x70) –18550 கிலோ

மேற்படி பேருந்து நிலையத்தில் உள்ள கட்டிடங்களில் இடித்து அப்புறப்படுத்தியதில் சேகரிக்கப்பட்டுள்ள பழைய இரும்பு பொருட்கள், ஆகியவற்றினை பகிரங்க பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி மூலம் ஏலம் நிர்ணயம் செய்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

அனுமதிக்கலாம்

(ந.க.எண்.1666/2022/இ1)

**அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மான எண். 4 நாள்.31.01.2025**

5. மேட்டூர் நகராட்சியில் பணிபுரியும் நிரந்தர தூய்மை பணியாளர்கள் 41 நபர்களுக்கும் 7 சுகாதார மேற்பார்வையாளர்களுக்கும் மற்றும் 1 களப்பணி உதவியாளர் மொத்தம் 49 நபர்களுக்கும் 2024–2025 ம் ஆண்டிற்கான Rain coat ஐ வாங்கி வழுங்கவும் தற்பொழுது மழைக்காலம் என்பதால் அவசர அவசியம் கருதி பணியாளர்களுக்கு வாங்கி வழுங்க ரூ.1 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழுங்கலாம்

**(ந.க.எண்.3207/2024/எச் 1)**

**அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மான எண்.5 நாள்.31.01.2025**

6. மேட்டூர் நகராட்சி – பொது சுகாதாரம் பிரிவில் – இயங்கி வரும் பேட்டரி வாகனம் TN 93 F7320 வாகனம் (சர்வீஸ்) செய்தமைக்கான பில்பட்டியல் வரப்பெற்ற தொகை ரூ.5302/– ஐ SRI LAKSHMI AUTOMOBILES WORLD அவர்களுக்கு வழுங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.1791/2024/எச்1)

**அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மான எண்.6 நாள்.31.01.2025**

7. மேட்டூர் நகராட்சியில் பல்வேறு திட்டப்பணிக்கு TUFIDCO நிறுவனத்தில் கடன் பெற்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேற்காண் கடனுக்கான தவணை தொகை போதிய வருமானம் இல்லாத நிலையில் நகராட்சியால் நேரடியாக செலுத்தப்படவில்லை. எனவே மேற்காண் கடனுக்கான தவணைதொகை இந்நகராட்சிக்கு வழங்கப்படும் மாநில பகிர்வு நிதியிலிருந்து நகராட்சி நிர்வாக இயக்குநரால் பிடித்தம் செய்து அனுப்பப்பட்டுள்ளது. இந்நிலையில் தவணை தொகைக்கான வருமானவரி 10% பிடித்தம் செய்து 2022-2023 மற்றும் 2023-2024ஆண்டுகளில் செலுத்தப்படவில்லை என தெரிவித்து வருமானவரி துறையில் இருந்து அறிவிப்பு பெறப்பட்டுள்ளது. எனவே வருமான வரி பிடித்தம் செய்து செலுத்தப்படாமைக்கான காரணத்தை தெரிவித்து மேல்முறையீடு செய்ய வழக்கறிஞர் திரு.எஸ்.ஸ்ரீதர், 116C, ராசம்பாளையம் ரோடு, S பெண்டு, வில்லரசம்பட்டி, ஈரோடு அவர்கள் நியமிக்கவும் அதற்கான செலவு வருடத்திற்கு ரூ.5250/-வீதம் மேற்கண்ட இரண்டு ஆண்டுக்கு ரூ.10500/- செலவு நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண்.1878/2021/பி2)**

**அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மான எண். 7 நாள்.31.01.2025**

8. சென்னை உயர்நீதிமன்றத்தில் இந்நகராட்சிக்கு எதிராக ஆணையாளர் மீது தொடரப்படும் வழக்குகளில் இந்நகராட்சி ஆணையாளர் சார்பாக ஆஜராகி வழக்கு நடத்தி கொடுக்கவும், மேலும் W.P.No.35757/2024 மேல்முறையீடு செய்ய திரு.லூர்துபால் மௌரியா வழக்கறிஞர் அவர்களை Standing council ஆக நியமனம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.3017/2024/அ2)

**அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மான எண். 8 நாள்.31.01.2025**

9. மேட்டூர் நகராட்சி தூக்கணாம்பட்டி மற்றும் எலிக்கரடு பகுதியில் அமைந்துள்ள தரைமட்ட குடிநீர் தொட்டி ஒப்பந்த முறையில் தனியார் பணியாட்கள் மூலம்  இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணி மேற்கொள்ளுதல் பணிக்கான மதிப்பீட்டு தொகை ரூ.2.30/– இலட்சத்தில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு 31.12.2024–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல்

| வ. எண் | பெயர் மற்றும் முகவரி | விலை விகிதம் |
|---|---|---|
| 1. | M/s.Govindan & Co Poosaripatti(P.o) Omular Salem | (–) 0.14% மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | M/s.Muthukumar, Engineering Construction Omular salem. | (+)0.91% மதிப்பீட்டை விட அதிகம் |

கீழ்கண்டுள்ளவாறு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.4170/2024/இ1)

**அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மான எண். 9            நாள்.31.01.2025**

10. மேட்டூர் நகராட்சிக்கு சொந்தமான புதிய ஈப்பு கொள்முதல் செய்யப்பட்டு இயக்கப்பட்டு வரும் TN93H4749 வாகனத்தின் கம்பெனி சர்வீஸ் பணி மேற்கொண்டதற்கு செலவின பட்டியல் தொகை ரூ.19776/–ஐ மகேந்திரா & மகேந்திரா நிறுவனத்தின் அங்கீகராம் பெற்றுள்ள M/s.SKS India Pvt Ltd, சேலம் டிலர் நிறுவனத்திற்கு தொகையினை பொதுநிதியிலிருந்து வழங்கியதனை மன்றத்தின் பதிவிற்க்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

மன்றம் பதிவுசெய்யலாம்.

(ந.க.எண்.1778/2023/இ1)

**அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மான எண்.10            நாள்.31.01.2025**

11. மேட்டூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.18–ல் தூக்கணாம்பட்டி பகுதியில் அறிவுசார் மையம் கட்டிடத்திற்கு சுற்றுச்சுவர் கட்டமைக்கும் பணிக்கான மதிப்பீட்டு தொகை ரூ.13.50/– இலட்சத்தில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி மற்றும்

நகர மன்ற தீர்மான எண்.616, நாள்.07.11.2024–ல் செலவினத்திற்கு அனுமதி வழங்கியுள்ளதற்கு 10.01.2025–ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டுள்ளவாறு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் மற்றும் முகவரி | விலை விகிதம் |
|---|---|---|
| 1. | M/s.Andavar Construction, Mettur | (–) 0.03% மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | M/s.Selvi Construction,Mettur | (+)2.71% மதிப்பீட்டை விட அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u>

அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1666/2022/இ1)

**அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மான எண். 11 நாள்.31.01.2025**

12. துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் சேலம் அவர்களின் கடிதத்தில் சேலம் மாவட்டத்தில் டெங்கு கொசுப்புழு வளர்நிலைகள் அதிகரித்து வருகிறது எனவே மழைக் காலங்களில் டெங்கு காய்ச்சல் பரவாமலும் அதிகரிக்காமலும் தடுக்கவும் , டெங்கு கொசுப்புழு தடுப்பு மற்றும் கட்டுப்படுத்தும் பணியினை தொடர்ந்து பணியாளர்களை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது எனவே இந்நகராட்சியில் தற்காலிகமாக 30 களப்பணியாளர் கொண்டு நவரத்தினம் மகளிர் சுய உதவிக் குழு மூலம் கொசுப்புழு தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது , இக்குழுவிற்கான பணி ஒப்பந்த காலம் 28.02.2025 ம் தேதியுடன் முடிவடைவதால் . அவசர அவசியம் கருதியும் நோய் பரவாமல் தடுக்கவும் களப்பணியாளர் , நபர் ஒருவருக்கு நாளொன்றுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் ,சேலம் அவர்களால் 2024–2025 ஆம் ஆண்டிற்கு நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி ரூ.473/– என்ற வீதத்தில் வழங்கப்பட்டு வருகிறது தற்பொழுது டெங்கு தடுப்பு பணி செய்து வரும் நவரத்தினம் மகளிர் சுய உதவி குழு மூலம் 01.03.2025 முத ல் 31.05.2025 முடிய உள்ள 3 மாத காலத்திற்கு டெங்கு தடுப்பு பணிக்கு தொடர்ந்து பயன்படுத்திக் கொள்ளவும் . அதற்கான தோராய செலவினம் ரூ.12.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்கான் செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் .

(ந.க.எண் . 1431/2020/எச் 1)

**அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மான எண். 12 நாள்.31.01.2025**

13. மேட்டூர் நகராட்சி பாதாள சாக்கடை திட்டபணிகள் தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தின் வாயிலாக வார்டு எண்.1 முதல் 30 வரையுள்ள பகுதிகளின் குடியிருப்புகள் மற்றும் வணிக கடைகளின் பாதாள சாக்கடை இணைப்புகளில் வெளியேற்றப்படும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு (STP) கொண்டு சென்று சுத்திகரிக்கப்பட்டு வருகிறது.

மேற்படி கழிவுநீர் அடைப்பு ஏற்பட்டால் அவற்றினை இயந்திரங்கள் கொண்டு அடைப்பு சரி செய்யும் பணிக்கு Jetting Machine – TN93A2362 D - Sitting மூன்று சக்கர ஆட்டோ வாகன எண்.TN939249, TN939185, ஆகிய வாகனங்கள் பயன்படுத்தப்படுகிறது.அவற்றிற்கு தேவையான எரிபொருள் வாங்க ஆகும். ஆண்டு உத்தேச செலவின தொகை ரூ.5.00/–இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1030/2005/இ1)

**அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மான எண்.13 நாள்.31.01.2025**

14. இந்நகராட்சி அலுவலக கணினி வசூல் உபயோகத்திற்கான பிரிண்டர் பழுதடைந்துள்ளதால் புதியதாக TVSMSP 250 DOT MATRIX PRINTER தேவை படுவதால் அவசர அவசியம் கருதி உள்ளூர் விநியோகர்களிடமிருந்து விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படியான விலைபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பொருள் | விலைப்புள்ளி விவரம் | | |
|---|---|---|---|---|
| | | SPIDER TECHNOLOGY | DIGI PRINTER SERVICE | CHANDRA HI–TECH |
| 1 | TVS MSP 250 STAR DOT MATRIX PRINTER | 10500 | 10750 | 10900 |
| 2 | TVS 80 CLM RIBBON CARTRIDGE | 180 | 200 | 215 |
| 3 | EPSON 80 LLM RIBBON CARTRIDGE | 250 | 300 | 320 |

மேற்கண்ட விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய Spyder Technology நிறுவனத்திற்கு விநியோக உத்திரவு வழங்கவும் அதற்கான செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.1112/2021/பி3)**

**அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மான எண்.14 நாள்.31.01.2025**

15. மனிதக்கழிவுகளை மனிதனே அகற்றுதல் தடை மற்றும் மறுவாழ்வு சட்டம் – 2013 ன் விதிகளின் படி மனிதக் கழிவுகளை மனிதனே அகற்றும் பணி மேற்கொள்பவர்களை கணக்கெடுப்பு செய்ய மாண்புமிகு உச்சநீதிமன்றம் 20.10.2023 தேதிய உத்திரவின் பேரில் கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளப்பட்டு மேட்டூர் நகராட்சி பகுதிகளில் மனிதக்கழிவுகளை மனிதனே அகற்றும் பணியாளர்களை யாரும் இல்லை என கண்டறியப்பட்டுள்ளது என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது . பொது மக்கள் தங்கள் கருத்துகள் மற்றுடம் ஆட்சேபணைகள் ஏதேனும் இருப்பின் ஆணையாளர் மேட்டூர் நகராட்சி அவருகளுக்கு 04298 244033 (14420) என்ற எண்ணிற்கோ அல்லது எழுத்து மூலமாகவோ அடுத்த 15 தினங்களுக்குள் தெரிவிக்க கீழ்கண்ட தினசரி நாளிதழில்களில் விளம்பரம் செய்யப்பட்டது

| வ.எண் | நாளிதழ்கள் | தொகை |
|---|---|---|
| 1 | தினமலர் நாளிதழ் | 2940/– |
| 2 | தினகரன் நாளிதழ் | 6888/– |

மேற்கான் விளம்பரம் செய்யப்பட்டமைக்கான தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.2599/2024/எச்1)

**அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மான எண்.15 நாள்.31.01.2025**

16. மேட்டூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 30 வரை உள்ள ஆழ்துளை போர்வெல் பழுது மற்றும் பராமரிப்புக்கான மோட்டார்கள் மராமத்து செய்யும் பணிக்கான மதிப்பீட்டு தொகை ரூ.7.00/– இலட்சத்தில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி மற்றும் நகர மன்ற தீர்மான எண்.623, நாள்.19.12.2024–ல் செலவினத்திற்கு அனுமதி வழங்கியுள்ளதற்கு 21.01.2025–ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டுள்ளவாறு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் மற்றும் முகவரி | விலை விகிதம் |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1. | Sri Ganesa &Co, Karumalaikoodal,Mettur. | (–) 0.14% மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | M/s.Juri Enterprises, Omalur Main Road,Salem. | (+)7.34% மதிப்பீட்டை விட அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u>

அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.3715/2024/இ1)

**அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மான எண்.16 நாள்.31.01.2025**

17. மேட்டூர் நகராட்சியின் அலுவலக பயன்பாட்டிற்கு, குடிநீர் பணிகளுக்கு மற்றும் பொதுசுகாதாரப் பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வந்துள்ள இலகுரக வாகனங்கள் மற்றும் கனரக வாகனங்கள் பழுதடைந்த உபயோகமற்ற நிலையில் உள்ள கீழ்கண்டுள்ள வாகனங்கள் விவரங்கள் TN27Y2206, TN52T8604, TN52W7242, TN52Z1876, TN27T3846, TN52W5972, TN27S1953, TN30V8764, TN27W0535 , MDS9042, TN27T7769,TN52Z1874 ஆகிய வாகனங்கள் மற்றும் டம்பர் பின்கள் பயன்படுத்த முடியாத நிலையில் பராமரிப்பு இல்லாமல் துருப்பிடித்த நிலையில் உள்ளது. மேற்படி கழிவு நீக்கம் செய்யப்பட்டுள்ள வாகனங்கள் வட்டார போக்குவரத்து அலுவலரால் ஆய்வு செய்து Life certificate சான்று பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.4368/2024/இ1)

**அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மான எண்.17 நாள்.31.01.2025**

18. இந்நகராட்சி பொறியியல் பிரிவின் கீழ் இயங்கி வரும் ஈப்பு வாகனம் TN- 52-W-4242 நகர்மன்ற தலைவர் பயன்படுத்தி வரும் வாகனம் பழுது நீக்கம் மற்றும் சர்வீஸ் செய்ய கோரி ஓட்டுநர்(பொ) கடிதம் வழங்கியுள்ளதனை தொடர்ந்து மகேந்திரா & மகேந்திரா நிறுவனத்தின் அனுமதி பெற்றுள்ள டிலர் S.K.S.INDIA.PVT.LTD, சேலம் நிறுவனத்திடம் ஈப்பு வாகனத்தினை பழுது நீக்கம் மற்றும் சர்வீஸ் செய்ய உத்தேச செவின தொகை ரூ.1.30/–இலட்சம் நகராட்சியின் பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.3697/2024/இ1)

**அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மான எண். 18 நாள்.31.01.2025**

19.

| **ஆண்டு குத்தகை இனங்கள்** | | | | | |
|---|---|---|---|---|---|
| **வ. எ ண்.** | **உரிம இனம்** | **ஏலம் மற்றும் ஒப்பந்தப் புள்ளிக்கு செலுத்த வேண்டிய வைப்புத் தொகை ரூ.** | வங்கி **உத்திரவாதச் சான்றிதழ் ரூ.** | **ஏலம் உறுதி செய்த பின்னர் செலுத்த வேண்டிய தொகை ரூ.** |
| *1.* | *2.* | *3.* | *4.* | *6.* |
| 1 | **மேட்டூர் கேம்ப், சேலம் கேம்ப் தினசரி அங்காடிகளில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்** | ரூ.650000 | ரூ.230000 | ஏலம் தொகை முழுவதும் 5 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் |
| 2 | **மேட்டூர் கேம்ப், மீன் அங்காடியில் கீழ்ப்புறமாக உள்ள 16 கடைகளில் இறைச்சிக் கடை வைப்பவர்களிடம், கட்டணம் வசூல் செய்யும் உரிமம்** | ரூ.15000 | ரூ,10000 | –do– |
| 3 | **மேட்டூர் கேம்ப், நவீன ஆடு வெட்டும் இடத்தில் கட்டண வசூல் செய்யும் உரிமம்** | ரூ.90000 | ரூ.35000 | –do– |
| 4 | **மேட்டூர் பேருந்து நிலையம் கழிப்பிடம் கட்டண வசூல் செய்யும் உரிமம்** | ரூ.700000 | ரூ.2000000 | –do– |
| 5 | **பொதுப்பணித்துறை பூங்கா முன்பு உள்ள கழிப்பிடம் கட்டண வசூல் செய்யும் உரிமம்** | ரூ.75000 | ரூ.25000 | –do– |
| 6 | **புகைவண்டி நிலையம் ஆர்.எஸ்.தினசரி மார்க்கெட் கழிப்பிடம் கட்டண வசூல் செய்யும் உரிமம்** | ரூ.75000 | ரூ.25000 | –do– |
| 7 | **முனியப்பன் கோவில் பகுதி கழிப்பிட கட்டண வசூல் செய்யும் உரிமம்** | ரூ.75000 | ரூ.25000 | –do– |

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | நான்கு ரோடு அருகில் கட்டப்பட்டுள்ள கட்டணம் பயன்கழிவறை மற்றும் குளியல் அறைக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | ரூ.75000 | ரூ.25000 | –do– |
| 9 | ஆடி பெருக்கு (ஆடி 18 மற்றும் ஆடி 28 ஆகிய இரண்டு நாட்கள் மட்டும்) திருவிழா காலத்தில் பாதை ஓரங்கல் தற்காலிக கடை வைப்பவர்களிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | ரூ.20000 | ரூ.10000 | –do– |
| 10 | பேருந்து நிலையத்தில் உள்ள நகராட்சி சைக்கிள் நிறுத்தும் இடத்திற்கு பின்புறம் பூக்கடை வைத்துக்கொள்வோரிடம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | ரூ.100000 | ரூ.200000 | –do– |
| 11 | மேட்டூர் நகராட்சி கழிவு நீர் பண்ணையில் உள்ள 427 தென்னை மரங்களின் பலன்களை மட்டும் அனுபவிக்கும் உரிமை | ரூ.75000 | ரூ.50000 | –do– |
| 12 | மேட்டூர் கழிவுநீர் பண்ணையில் உள்ள (20) ஏக்கர் யானைப்புல் (பச்சை சீமசோள தட்டு)பலன் மட்டும் அனுபவிக்கும் உரிமம் | ரூ.350000 | ரூ.150000 | –do– |
| 13 | சேலம் கேம்ப் கழிவுநீர் பண்ணையில் உள்ள 14 1/2 ஏக்கர் புன்செய் நிலத்தை விவசாயத்திற்கு பயன்படுத்திக் கொள்ளும் உரிமம் | ரூ.30000 | ரூ,10000 | –do– |
| 14 | மேட்டூர் கழிவுநீர் பண்ணையில் உள்ள 15 இலவம் பஞ்சு மரங்களின் இலவம் பஞ்சினை மட்டும் பலன் அனுபவிக்கும் உரிமம் | ரூ.5000 | ரூ.2500 | –do– |
| 15 | மேட்டூர் கேம்ப் பேருந்து நிலையத்தில் நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | ரூ.500000 | ரூ.1800000 | –do– |
| 16 | மேட்டூர் கழிவு நீர் பண்ணையில் உள்ள பனை மரங்களின் பலன்களை மட்டும் அனுபவிக்கும் உரிமம் | ரூ.5000 | ரூ.2500 | –do– |

| | | | | |
|---|---|---|---|---|
| 17 | மேட்டூர் கழிவு நீர் பண்ணையில் உள்ள 42 மாமரங்கள் மற்றும் நாவல் மரங்களின் பலன்களை மட்டும் அனுபவிக்கும் உரிமம் | ரூ.15000 | ரூ.10000 | –do– |
| 18 | மாதையன் குட்டை ஐடிஐ அருகில் உள்ள வர்டு பி, பிளாக்–15, நகரபுல எண்.8,1 ஹெக்டேர் 4488.0 ச.மீ பரப்பளவுள்ள புன்செய் நிலத்தினை விவசாயத்திற்கு பயன்படுத்திக்கொள்ளும் உரிமம் | ரூ.10000 | ரூ.10000 | –do– |
| 19 | சேலம்கேம்ப் ஞாயிறு தோறும் கூடும் வாரச் சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | ரூ.35000 | ரூ.20000 | –do– |
| 20 | நகராட்சி எல்லைக்குள் வாரச்சந்தைகள்,தினசரி மார்கெட் தவிர சாலை ஓரங்களில் தற்காலிகக் கடை வைப்பவர்களிடமும், தெருவில் வாகனங்கள் மூலம் வியாபாரம் செய்பவர்களிடமும் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | ரூ.55000 | ரூ.25000 | –do– |
| 21 | பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டுள்ள இரண்டு சக்கரம் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்தும் இடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | ரூ.700000 | ரூ.2000000 | –do– |
| 22 | பேருந்து நிலையத்தில் பேருந்துகள் வரும் நேரம், புறப்படும் நேரம் மற்றும் விளம்பரங்களை ஒலிபெருக்கி உரிமம் | ரூ.100000 | ரூ.200000 | –do– |
| 23 | சேலம் கேம்ப் தினசரி அங்காடியில் இறைச்சி கடை (எண்.9மற்றும் 10) உட்பட கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | ரூ.15000 | ரூ.10000 | –do– |

அனுமதிக்கப்பட்டது.

தீர்மான எண்.19 நாள்.31.01.2025